29th March 1958]

SRI N. K. PALANISAMI: ஆகவே, விலைவாசிகள் அதிகமாக இருப்பதினால், போக்குவரத்து வசதியை குறைந்த சார்ஜில் அதிகபபடுத்துவதற்கு மந்திரி அவர்கள் மத்திய சர்க்கார் மூலம் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதில் ஒன்றும் மத்திய சர்க்காரின் உதவி வேண்டியதில்லை. போக்குவரத்து வசதிகளெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. நான் முன்பு சொன்னது போல இன்னும் உற்பத்தி பெருகினால், விலை குறையும்.

SRI A. VEDARATHNAM: இந்த புள்ளி விவரங்களில் கொடுக்கப்பட்டிருப்பது அரிசியா, நெல்லா என்பதை தயவுசெய்து அறிவிக்க வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது அரிசிதான்.

Rice

* 456 *Q.*—SRI K. RAMACHANDRAN: (on behalf of Sri S. B. Adityan): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any communication has been received from the Union Food Ministry in the matter of reducing the consumption of rice in the State; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The answer is in affirmative.

(*b*) The suggestions contained in the communication are under consideration of the Government. Meanwhile this Government have taken steps to ask the proprietors of hotels and other catering establishments to use more of wheat than rice preparations. Orders have also been issued to reduce rice portion of diet by one ounce to the labouring and non-labouring convicts of the "C" class confined in Central Jails, Salem and Cuddalore, as an experimental measure for a period of three months. Issue of 10 ounce of rice and 10 ounce of wheat per head per diem instead of 20 ounce of rice per head per diem to the inmates of the Aftercare Home for Males, Madras, as an experimental measure for a period of three months has also been ordered. The public have been requested through a Press Note to avoid wastage of food and to eat more of wheat, vegetables, fruits, etc., than rice. The Government have also ordered to issue through fair price shops wheat only and stop issue of rice from 1st March 1958.

SRI K. ANBAZHAGAN: அரிசியினுடைய தேவையை அல்லது அரிசியை மக்கள் பயன்படுத்துவதை குறைக்கவேண்டுமென்ற கருத்து தோன்றுவதற்கு என்ன காரணம்? அரிசி சாப்பிடுவதனாலே அறிவு அதிகமாக வளரும் என்ற கருத்து இருப்பதினாலே அதை தடை செய்யவேண்டுமென்பது நோக்கமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எத்தனையோ அபிப்ராயங்கள் இருக்கின்றன. அரிசியைவிட மீன் சாப்பிடுவது நல்லது, அதில்தான் பாஸ்பரஸ் அதிகமாக இருக்கிறது என்று நான் சிறு வயதில் பிரஸிடென்ஸி காலேஜில் படிக்கும்போதே அங்கு இருந்து

வந்தவர்கள் சொன்னார்கள். அறிவை குறைக்கவேண்டுமென்ற நோக்கம் யாருக்கும் இல்லை. ஆனால் ஒரே வகை உணவை, அதாவது அரிசியையே கட்டிக் கொண்டிருப்பது நல்லது அல்ல. திடீர் திடீர் என்று பஞ்சம் வரும்பொழுதும், அல்லது வேறு ஆபத்துக்கள் வரும்பொழுதும், உணவுக்குக்கூட வெளி நாடுகளை நம்பியிருக்கக்கூடிய கேவல நிலை கூடாது என்பதுதான் இதனுடைய அடிப்படை. ஆகவே, நாம் அரிசி சாப்பிடு வதோடு, மற்ற உணவையும் சாப்பிட பழக்கிக்கொள்ளவேண்டும். சத்துள்ள உணவாக இருக்கவேண்டும். பாலன்ஸ்டு டயட்டாக இருக்கவேண்டு மென்பதுதான் இதனுடைய அடிப்படை.

SRI S. LAZAR : மத்திய சர்க்காரிடமிருந்து இந்த யோசனை வருவதற்கு முன்னாலேயே, நமது அமைச்சர் அவர்கள் கோதுமையை சாப்பிடவேண்டுமென்று சொல்லியதோடுகூட, தானும் சாப்பிட ஆரம் பித்ததாக பத்திரிகையிலே பார்த்தேன், அது உண்மைதானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பத்திரிகையில் வந்ததில் ஒன்றும் தவறுதல் இல்லை.

SRI A. A. RASHEED : May I know, Sir whether wheat and wheat products are supplied to the patients in the hospitals?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have issued instructions that we shall not touch hospitals. Also I have issued instructions that we shall not do anything which would affect the production of 'Idly' and 'Thosai'. I may tell the hon. Member that these instructions are very much appreciated by the Union Minister for Agriculture who likes 'Idly' and 'Thosai'.

SRI A. V. P. ASAITHAMBI : வடநாட்டினர் நம் மீது மொழியை தான் திணிக்கிறார்கள் என்றால் உணவையும் ஏன் திணிக்க வேண்டும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் ஒன்றையும் திணிக்கவில்லை. நமக்கு ரொம்ப நாளாக ரவா உப்புமா சாப்பிட்டு பழக்கம் அவர்களிடத்தில் நாம்தான் இட்லி, தோசை, சாம்பார் இவைகளை திணிக்கிறோம். (சிரிப்பு)

SRI K. VINAYAKAM : In order to popularise non-rice dishes like wheat dishes, will the Government come forward to subsidise sale of wheat? The Government should pay 50 per cent of the cost and the consumers should be asked to pay only 50 per cent. This will result in considerable reduction of price of wheat to the consumers and this would tempt them to purchase wheat instead of rice.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No such subsidy is necessary. I am glad to tell the hon. Member that the Madras hotels have taken to it very willingly and enthusiastically. They are first-class businessmen. If it would affect their business they won't take to it. The wonder of it is, the Madras Hotels' Association and hotel after hotel have taken to wheat dishes being supplied to the consumers.

SRI P. S. SANTHANAM : இப்போது கோதுமை மிகுதியாக இருப்பதால், திருச்சி போன்ற இடங்களிலுள்ள சிறைகளில் இருக்கும் கைதிகளுக்கு சோளக்கஞ்சிக்கு பதிலாக கோதுமை ரொட்டியைக் கொடுத்தால் நன்றாக இருக்குமல்லவா ?

29th March 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோதுமை மிகுதியாக இல்லை. அதுவும் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. அதைக்கூட நாம் இறக்குமதி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. இருந்தாலும், கோதுமையை இறக்குமதி செய்வதில் கஷ்டம் இல்லை. சில சிறைகளி லுள்ள திராவிடக் கழகக் கைதிகளே "ராகி, சோளம் முதலியவை களைச் சாப்பிடுவதைவிட கோதுமையையே சாப்பிடுகிறோம், கோதுமையே கொடுங்கள்" என்று எங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். சோளம், கம்பு முதலியவைகள் வேண்டாமென்றும் கோதுமையே வேண்டுமென்றும் கேட்கிற கைதிகளுக்கு கோதுமை கொடுக்கலாம் என்று இப்போது உத்திர விடப்பட்டிருக்கிறது.

Small-scale industries

* 457 SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount allotted to the North Arcot district for small-scale industries for the year 1957–58;

(*b*) the amount spent so far taluk-wise; and

(*c*) the names of the industries and the villages where the amount has been spent so far?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 4,62,500.

(*b*) Vellore taluk, Rs. 1,63,005·90.
Ambur taluk, Rs. 78,857·80.

(*c*) (i) General Purposes Engineering Workshops, Vellore.

(ii) Service-*cum*-Training Centre for tanning and finishing leather at Vinnamangalam.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us whether all the amount that has been allotted has been spent?

THE HON. SRI R. VENKATARAMAN : The budget provision for 1957–58 for the General Purposes Engineering Workshop at Vellore was Rs. 2,50,700 and the amount spent up to 31st December 1957 is Rs. 1,63,000. I may tell the hon. Member that I just now opened the General Purposes Engineering Workshop at Vellore. In regard to Service-*cum*-Training Centre at Vinnamangalam, certain machinery has to be imported. At present the expenditure is Rs. 78,857.

SRI S. LAZAR : சிறு தொழில்களை ஆரம்பிப்பதைப் பொறுத் தவரையில், ஏற்கெனவே இருந்து சிதைந்துபோயிருக்கும் தொழில்களை மட்டுமே எடுத்துக்கொண்டு அவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது சர்க்காரின் கொள்கையாக இருக்கிறதா ? அல்லது, புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏற்கெனவே இருக்கும் தொழில்களையே அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை அல்ல. பல புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. உதாரணமாக, வேலூரில் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "ஜெனரல் பர்பஸஸ் எஞ்ஜினீரிங் ஒர்க்ஷாப்" புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சாலை தான். அங்கே சைக்கிளின் பாகங்களையும் எஞ்ஜினீரிங் காரியங் களில் உபயோகப்படும் பல பொருள்களையும் தயாரிக்கப்படும்.